ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்ய தர்மம்.

एहि स्वागतमाविशासनमिदं कस्माच्चिराद् दृश्यते
का वार्ता परिदुर्बलोसि नितरां प्रीतोस्मि ते दर्शनात् ।
इत्येवं समुपागतं द्विजवरं संभावयत्यादरा-
त्तेषां युक्तमशंकितेन मनसा गेहेषु गन्तुं सदा ॥

தன்வீட்டை நோக்கிவரும் பந்து மித்திரன் முதலியவர்களை ஆதரவுடன் வரவேற்றி, சௌக்கியமா? என்று குசலப்பிரச்னம் செய்து உசிதமான ஆஸனத்திலிருத்திப் பிறகு எங்கிருந்துவருகிறீர்கள்? தங்களைப்பார்த்து வெகு காலமாயிற்றே, விசேஷசமாசாரம் ஏதேனுமுண்டோ? தங்கள் சரீரம் மிகவும் மெலிந்திருக்கின்றதே, இப்பொழுது தங்களுடைய தர்சனத்தால் அதிக ஆனந்தத்தை யடைகிறேன் என்று எவனொருவன் வந்தவர்களைப் பிரியத்துடன்வரவேற்றி குசலப்பிரச்னம் செய்து உபசாரம் பண்ணி சந்தோஷமாய் ஸல்லாபம் செய்கிறானோ அவனுடைய கிரகத்தைநோக்கிச் சந்தேகப்படாமல் எப்பொழுதும் போகலாம் என்று ஒருவர் அதிதிஸத்காரம் பண்ண வேண்டிய மார்க்கத்தைக் காண்பிக்கிறார்.

இதனால் நம் வீட்டுக்கு யாராவது வந்தால் அவனுக்கு நல்வரவு கூறாமலும், வந்துவிட்டானே என்ற மனவருத்தத்துடன் அவன் ஏதாகிலுங் கேட்டாலும் அதைப் பொருட்டாக எண்ணிப் பதிலுரைக்காமலும் மிகவும் கடுகடுப்பான முகத்துடன் அவனைப்பார்த்து, நாம் ஏன் இங்குவந்தோம் என்று அவனுக்கு மனவருத்தத்தை யுண்டுபண்ணாமல் பிரீதியுடன் தம் சக்திக்கியன்றவாறு அவரையாதரித்து அதனாலேற்படும் சிரேயஸ்ஸை யடையவேண்டுமென்று நிரூபிக்கிறார்.　　சுபம்.

## பசுவின் உபயோகங்கள்.

வேள்வி, அக்கினி ஹோத்திரம் முதலிய வைதிககர்மங்களுக்கு பசுவின்பால் முக்கியமாக உபயோகப்படுகின்றது. சிற்சில தோஷங்களுக்குப் பரிகாரமாக, அதன் பால் நெய் தயிர் நீர் இவற்றை நம் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளவாறு சேர்த்துச் சாப்பிட்டால் சரீரத்திற்குச் சுத்தியுண்டாகின்றது. இதையே பஞ்சகவ்யப்பிராசனமென வைதிகர்கள் வழங்குவார்கள். பின்னுமதன் நெய்யைக்கொண்டே நடைபெறவேண்டிய பல வைதிககருமங்களும் உள. ஆகாரமின்றி அதிக நியமத்துடன் சிராத்தம் முதலிய கருமங்களைச் செய்பவர்கள் வியாதியினாலோ அல்லது மூப்பினாலோ உபவாஸமிருக்க வியலாவிடில், பசுவின் பாலை அருந்திப் பின்னர் சிராத்தத்தை யனுஷ்டிக்கலாமெனவும், அதனால் நியமத்திற்குப் பங்கமில்லை யெனவும் ஆன்றோர் கொள்கை. அன்றியும், குடும்பநலத்தைக் கருதி ஆண்டுதோறும் தைமாதத் துவக்கத்தில் கோக்களை இந்துக்கள் யாவரும் பூஜிக்கின்றார்களென்பது கண் கூடு. இதற்கிணங்கவே,

पूर्वं पूज्य च गामेकां दत्त्वा नैवेद्यमुत्तमम् ।
पश्चात्प्रदक्षिणाः कार्या नत्वा तां च पुनःपुनः ॥

मन्त्रः —

गवामङ्गेषु तिष्ठन्ति भुवनानि चतुर्दश ।
यस्मात्तस्माच्छिवं मे स्यादिहलोके परत्र च ॥

एवं प्रदक्षिणं कृत्वा कर्मपाशैः प्रमुच्यते ॥

முதலிய வசனங்கள், "கோபூஜை செய்வோன், உத்தமமான நிவேதனங்களால் அதைப் பூஜித்து, பின்னர் "ஈரேழு உலகங்களையும் தன் சரீரத்தில் வகிக்கும் இப்பசுவானது எனக்கு இவ்வுலகிலும் மேலுலகிலும் நற்கதி அளிக்குமாக" எனப்பொருள் கொண்ட "गवामङ्गेषु" என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டு அப்பசுவை வலம் வருவானாகில்; அவன் முற்பிறவியில் தன்னால் செய்யப்பட்ட கர்மவசங்களினின்றும் விடுபடுகிறான்" எனச் சாற்றுகின்றன.

இவ்விதம், சகல தேவதா ஸ்வரூபமாய் விளங்கும் கோவினிடத்தில் தொண்டு செய்பவன் வைகுண்டவாசியான ஸ்ரீமந் நாராயணனுடைய திருவருளுக்குப் பாத்திரனாகிறான். சுருக்கிக்கூறுங்கால், ஆவின் சம்பந்தமே சகல பாபங்களையும் நிவர்த்திக்கும் ஓர் பேரௌஷதம் என்னலாம்.
இதையே,

"सर्वदेवमया गौस्तु तुष्येत्तद्भक्तितो हरिः ।
हरति स्पर्शनात्पापं"

என்று ஸ்மிருதியும் புகட்டுகின்றது. மற்றும்,

"यच्छफाहतभूमस्तु .... वन्द्या गावः कथ न्न ताः ॥"

"எதனுடைய குளம்படியால் பூமியிலிருந்தும் கிளம்பிய தூளியின் சம்பந்தமானது ஜனங்களுடைய பாபங்களை நாசம் செய்கின்றதோ, அத்தகைய மகிமை வாய்ந்த பசுவை ஏன் வணங்கக்கூடாது ?" எனப் பெரியோர் கூறியுள்ளவாறு, கோவின் பாததூளிசம்பந்தமே நம் பாபங்களை அறவே நீக்கவல்ல மகிமை வாய்ந்ததென்பதிற் சிறிதும் ஐயமின்றாம். இக்கருத்துக் கொண்டே கர்ணாமிருதாசாரியர் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப்போற்றுங்கால்,

"गोधूलिधूसरितकोमलकुन्तलाभं"

[பசுக்களுடைய பாததூளிசம்பந்தத்தால் மிகவும் அழகிய கேசத்தின் ஒளியையுடைய பகவானை] எனத் துதித்திருக்கின்றார்.

மூவுலகையும் படைத்து அதிலுள்ளயாவருக்கும் விரும்பியதை யளிக்கும் சக்திவாய்ந்த மகானுடைய கேசத்திற் சம்பந்தித்த இந்ததூளி அதற்கும் ஓர் ஒளியைக் கொடுக்கின்றதென்றால், அதன் மகிமை எத்தகையதெனக் கூறவும் வேண்டுமா? இவ்வித மகிமை பொருந்திய கோவை கறக்கும் சமயத்தில் கன்றுடன் தானம் செய்வது சாலவும் நன்றென ஆனுசாஸநிக பர்வாவில் பீஷ்மாசாரியரும் தருமருக்குப் பின்வருமாறு உபதேசித்திருக்கின்றனர்.

प्रयच्छते यः कपिलां सवत्सां कांस्योपदोहां कनकाग्रशृङ्गीम् ।
तैस्तैर्गुणैः कामदुघास्य भूत्वा नरं प्रदातारमुपैति सा गौः ॥
यावन्ति रोमाणि भवन्ति धेन्वास्तावत्फलं प्राप्य स गो प्रदानात् ।
पुत्रांश्च पौत्रांश्च कुलञ्च सर्वमासप्तमं तारयते परत्र ॥

இதன் பொருளும் பின்வருமாறு:— எவனொருவன் கபில நிறமுள்ளதும், சுவர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டக் கொம்புகளுடன்கூடியதுமான பசுவை கன்றுடனும், கறப்பதற்குவேண்டிய வெண்கலப் பாத்திரத்துடனும் தானம் செய்கின்றானோ அவன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய சிறந்த குணங்களுடன் அவனையே அப்பசுவானது திரும்ப அடைகின்றது. அன்றியும், இவ்விதம் தானம் செய்பவன் அக்கோவின் சரீரத்தில் விளங்கும் கேசங்களின் சங்கியையை ஒப்பிடக் கூடிய பலன்களைப் பெற்று புத்திரர்களாலும் பௌத்திரர்களாலும் நிறைந்த தன் குலத்தை ஏரேழுதலைமுறை நற்கதி யடையும்படி செய்கிறான்" என்று யாக்ஞவல்கிய ஸ்மிருதியும் இவ்விதமே கூறி, சுவர்ணம் முதலிய ஆபரணங்கள் போடச்சக்தியில்லாவிடினும்

கோதானம் செய்தவன் மேலுலகில் பூஜிக்கப் படுகிருனென வும், 'उभयतोमुखीं' (முன்பக்கம் பின்பக்கம்) இருபக்கங்களிலும் முகத்துடன்கூடிய (கன்றுபோடும் காலத்தில் கன்றின் முகம் மாத்திரம் வெளியில் வந்திருக்கும் சமயம் இவ்விதம் நேரலா மெனகொள்க] கோவை விதிப்படி தானம் செய்தல் மிகப் புண்ணியமெனவும் கூறியிருப்பதைக்காண்க. தற்காலத்திலும், சில செல்வவந்தர்கள் தங்கள் குடும்பத்தில் யாராவது பெரி யோர்கள் மரித்தால் அவ்வன்னோர் நற்கதி பெறவேண்டி கோ தானம் செய்கின்றனரென்பது யாவருமறிந்தவிஷயமேயாம்.

---

ஸாமவேத உபாகர்ம விஷயமாய் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளால் ஆர்யதர்மம் ரு கவது ஸஞ்சிகையில் சொல்லப்பட்ட ஸமாதானங்களுக்கு கிரமமாய் முக்கியமான சில பாராக்களுக்கு மட்டும்

## இங்கு உத்திரம் கூறுவாம்.

(ருசகூவது பக்கத்தொடர்ச்சி.)

6. "இரண்டாம் வேற்றுமையுடன் கூறியிருப்பதால் பல ஸ்மிருதிகளுக்கு உசிதமான கருத்தைக் கொள்ளவேண்டும்" இதற்கு ஸமாதானம் விருத்தியில்,

अन्यदपि बहुस्मृतिसमाचारासिद्धं कर्तव्यम् ।

என்று சொல்லியதற்கு प्रोष्ठपदशुक्लपक्षहस्तेनाचार्यः என்று ஆரம்பித்து கிருஹ்ய பரிசிஷ்டாதி கிரந்தங்களில் சொல்லப்ப ட்ட ரிஷி தர்ப்பணம், பூஜை முதலிய விசேஷங்களைச் சேர்த்த நுஷ்டிக்கவேண்டுமென்றே அர்த்தம் கொள்ளலாம். அப்படியே தான் அநுபதமே விருத்திகாரரால் கூறப்பட்டுள்ளது.

7. இரண்டாவதை கௌணகாலமாக ஒத்துக்கொண்டாலும் தோஷமில்லையென்றபடியால் அதில் நமக்கு அநுஷ்டானம் வராது.

9. மௌட்டியதோஷத்தைக் குறிக்கின்ற ஸ்மிருதி வசனங்களிருந்தாலும் அவைகள் அபவாத வசனங்களால் பாதகமடைந்து விட்டதினால் தோஷத்தைப் பாராட்ட வேண்டாமென்றேயாகும். यज्ञोपवीतं कर्तव्यं + नित्यकर्मवत् । என்ற வசனமே இதற்குப் ப்ராமாணமாகும். नित्यकर्मवत् என்ற வாக்ய சேஷத்தினால் அப்படியே தீர்மானம் செய்யலாம்.

10. शाखाधीशे இந்த வசனத்தை விதியாக எடுப்பது தான் உசிதமென்று முந்தியே கூறப்பட்டது. தோஷத்தை பாவித்தாலும்

स्वोच्चमित्रांशगो यदि । स्वराशिमूढगौ चैव मौढ्यदोषो न विद्यते ।

என்றபடி அங்காரகன் மித்திரக்ஷேத்திரத்தி லிருப்பதாலும் தோஷமில்லையென்றேயாகும்.

प्राधान्येन विधानाच्च मनुनाध्यायकर्मणः ।
प्रथमोपाकृतिश्चापि कर्तव्येत्याह गौतमः ॥

என்ற கௌதமாபிப்பிராயப்படி சாந்தியுடன் ப்ரதமத்தையும் முக்கியகாலமாகிய பூர்வஹஸ்தத்தில் அநுஷ்டிக்கலாமென்று தோன்றுகிறது. இதை கௌண முக்கிய எல்லாகாலங்களிலும் தோஷம் வந்தால் சாந்திபூர்வகா நுஷ்டான விஷயமென்பது சரியல்ல.

प्राधान्येन विधानाच्च मनुनाध्यायकर्मणः ।

என்று சொல்லியிருக்கிற ஹேதுவினால் அத்தியயனம் ப்ரதானமானதால் சுத்தமாகிய கௌணத்தை ப்ரதீக்ஷிக்காமல் முக்கியத்திலேயே செய்துவிடலாமென்று விதிப்பதாகவேயாகும். ஆகவேஎல்லாவிடங்களிலும் ப்ரதம விஷயமாகத்தான் தோஷம் வருமென்றிருப்பதாலும் கௌதமபக்ஷப்படி அதையும் செய்ய

லாமென்றும், விசேஷமாய் அங்காரகமௌட்யம் தோஷமாகா தென்றிருப்பதாலும் கிருஹ்யாதி சாஸ்திரங்களில் பூர்வஹஸ் தமே எடுக்கப்பட்டிருக்கிறபடியாலும் அதில்தான் செய்வது சாஸ்திரசம்மதம் என்று வெளியாகிறது. ஆச்வலாயனரும் ப்ரதம விஷயத்தில்தான் தோஷம் வருமென்றார்.

ग्रहदोषाद्युपाकर्म प्रथमं न भवेद्यदि ।

என்றவாறு கிருஹ்யாதி சாஸ்திரத்திலும் ஸ்பஷ்டமாய் விதி பூர்வஹஸ்தபரமாகவே யிருக்கிறது. அப்படியே காதிரகிருஹ் யத்திலும் கோபிலகிருஹ்யத்திலும் प्रोष्ठपदीं हस्तेनोपाकर्म என்று சொல்லி

अर्धपञ्चमासानधीत्य पौषीमुत्सर्गः, तैषीमुत्सृजान्ति

என்று சொல்லி 4½ மாதம் அத்தியயனம் என்று உபஸம்ஹாரம் செய்திருப்பதால் அதையே ஸித்தாந்த மெனக்கொண்டு சிரா வணபூர்வஹஸ்தத்தில் உபாகர்மம் செய்யவேண்டுமென்றுதான் நிர்ணயம் செய்யலாம். கௌதமரும் அப்படியே தான். சொல்லுகிறார்—

श्रावणादि वार्षिकं प्रोष्ठपदीं वा &c. अर्धपञ्चमान्मासान्

இப்படிஸ்பஷ்டமாய் காலவிதியிருப்பதால் आत्मतन्त्रेषु यन्तोक्तं என்றபடி இதர ஸ்மிருதிகளைக் கொண்டு விகல்பிக்க அவகாச மில்லை. மேலும்

अप्रमाणमृषिं कृत्वा अन्धेतमसि मज्जति

என்றபடி நிந்தையிருப்பதால் ஸூத்திரம், அதன் விருத்தி இவைகளில் சொல்லப்பட்டதை கௌரவத்துடன் அநுஷ்டிக்க வேண்டும்.

कन्यापरपक्षे என்ற நிகத வாக்கியபடி அபரஹஸ்தம், மௌட்டி யாதி தோஷமில்லை யென்றதினால் இவ்விடம் வராது.

अपवादाभावे उत्सर्गस्यैव प्राप्तिः என்ற நியாயப்படி ஸூத்திரமதம் தான் ஸித்தாந்தம். மேலும் குஜமௌட்யத்தைப் பற்றி ஒரு

கிரந்தத்திலும் விசேஷமான நிஷேதம் பரிகாரம் இவை சொல்லப்படாமலிருப்பதால் அதைப் பற்றி அதிக்லேசம் எடுப்பது நியாயமில்லையென்றும் தோன்றுகிறது. ஆனால், வை-தீக்ஷிதர் கன்யாமாஸாபரபக்ஷத்தில் செய்கிறார்கள் என்று சொல்லியதற்கென்னகதி யென்று கேள்வியுண்டாகும். அதற்கு சமாதானம் இந்த அபிப்பிராயத்திற்கு மூலமாய் மூலஸ்மிருதி வசனம் ஒன்றும் அவரால் எடுத்துரைக்கப் படவில்லையாதலால், நமக்கு அவரிடத்தில் ஆதரவிற்கு யாதொரு குறைவில்லாமல் போனாலும்

**यावन्मूलदर्शनं अननुष्ठानलक्षणमप्रामाण्यम् ।**

என்றபடி சமாதானத்தை அடையவேண்டுமென்று தோன்றுகிறது. இவர் அபிப்பிராயம் ஆசாரத்தை ஒட்டியிருந்தால் அதற்கும் கௌரவம் கொடுத்து. அனுஷ்டிப்பவர்களை நாம் தடுக்கவில்லை. ஆனால் அதற்கு ஸங்கிரஹவசனம் ஒன்றுமட்டுமே ப்ராமாணமாயிருக்கும். வசன பலாபலங்களைக் கவனித்தால் சூத்திரக்காரர் மதம் தான் ஸித்தாந்தம் என்று தீர்மானிக்கலாம்.

ப்ரசங்காத், இந்த ரிஷிகளின் ஸூத்திரத்தில் ஒரு விசேஷமிருக்கிறது. அதைச் சற்று உணர்வாம்.

**श्रावणीमित्येके** இந்த ஸூத்திரத்தினால் ஆபஸ்தம்ப பக்ஷத்தை எடுத்துரைக்கிறார். கௌணகால விதானமல்ல. ஆபஸ்தம்பரும்

**अर्थपञ्चमांश्चतुरोमासानित्येके ।**

என்று சந்தேகாபிப்ராயத்தை எடுத்துரைத்தார். இப்படி பரஸ்பரம் ரிஷிகள் இதர மதத்தை எடுத்தும் உபன்யாசிப்பார்கள். இந்த விஷயம் கவனிக்காமல் இரு சூத்திரக்காரர்களும் **एके** என்ற மதத்தைக் கௌணகாலமாகவே கொள்வது சரியல்ல என்று தோன்றுகிறது அப்படியே கோபிலபுத்திரர் சொல்லுகிறார்.

आचार्यानुमतंवाक्यमेकीयं गृह्यते क्वचित् ।
शेषाणि चैव वाक्यानि आचार्यो न प्रशंसति ॥

இப்படி அனேக நியாயங்களைப் பார்த்து நிச்சயம் செய்ய வேண்டியிருக்கிறது. இவைகளெல்லாம் கவனித்தால் நமது நிர்ணயம் சரியென்றே தோன்றுகிறது.

V. S, ராமநாத சாஸ்திரி.

குறிப்பு:— இங்கு கூறப்பட்ட உத்திரங்கள் பிரும்மஸ்ரீ ம. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களுடைய சமாதானத்திற்குச் சரியானபதிலாக ஆகமாட்டாதென்று பிரும்மஸ்ரீ யக்ஞசுவாமி சாஸ்திரிகளவர்களால் விஸ்தாரமாய் சென்ற 33 ஆவது ஸஞ்சிகையில் கூறப்பட்ட விஷயங்களால் நன்கு எல்லா ஜனங்களும் அறிந்து கொள்வார்களாகையால் ஷை ராமனுத சாஸ்திரிகளால் எழுதப்பட்ட இந்த விஷயங்களுக்கு ஒவ்வொரு பாராவிற்கும் கண்டனமாய் நம் பேபரில் பிரசுரிக்கும்படி அனுப்பிய விஷயங்களை அனுவசியமாய் விஸ்தரிக்க வேண்டாமென்று போடாமல் நிறுத்தப்பட்டது.

☞ இனி இங்கு இவ்வருட ஸாமோபாகர்ம சம்பந்தமான விஷயங்களுக்கு இந்த பேபரில் இடம் கொடுக்கப்படமாட்டாது. ப—ர்.

# இந்துதேச வைத்தியம்.

(ருகசு-வது பக்கத்தொடர்ச்சி)

தற்காலம் சுதேச வைத்தியத்தை முன்னுக்குக் கொண்டு வருவதென்றால் அது சுதேச வைத்தியர்களாலாகாத காரியமாகும் ஆகவே ஆங்கிலவைத்திய முறையிற் தேர்ச்சி பெற்ற, சுதேசிகளும் விஷயமறிந்த சுதேச வைத்தியர்களும் ஒன்று

கூடவேண்டும். தற்காலம் சுதேசவைத்திய பாடசாலைகள் மிகக் குறைவாகவே யுள்ளபடியால், ஆங்காங்கு பற்பலவிடங்களில் சுதேச வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும் ஸ்தாபனம் செய்து, சுதேச வைத்தியத்தைக் கிரமமாகப் பிறருக்குக் கற்றுக் கொடுத்துப்பிரபலப் படுத்தவேண்டும். கல்கத்தா, பம்பாய் முதலியவிடங்களிலுள்ள, ஐரோப்பிய வைத்தியம் கற்ற சுதேசிகள் சிலர் சுதேசவைத்திய விஷயமாய் வெகு கவலையெடுத்துக்கொண்டு உழைத்து வருவது போல, விஷயமறிந்த ஒவ்வொருவரும் தங்களால் கூடிய வரையில் பிரயாசை யெடுத்துக் கொண்டு உழைக்க வேண்டும். தாங்கள் கண்ட அநுபவத்தைப் புத்தகமூலமாயினும் மற்றெவ்விதமாயினும் வெளிப்படுத்த வேண்டும். ஆகவே சுதேச ஆங்கில வைத்திய சிரேஷ்டர்கள் ஒன்று கூடி அவர்கள் மகா நாடுகளில் வைத்திய முறைகளைப் பற்றி ஆலோசனை செய்து, பற்பலவிடங்களில் வைத்திய பாடசாலைகளேற்படுத்தி, பத்திரிகைகள் [Pamphlets] மூலமாகவும் அரிய விஷயங்களை வெளியிட்டு, இன்னும் பல வழிகளில் ஊக்கத்துடன் உழைத்து, தற்காலம் மறைந்து கிடக்கும்பிராசீன இந்து வைத்தியத்தை உஜ்ஜீவனம் செய்யும் படிக்கும், உள் நாட்டுப் பணத்தை அயல் நாடுகளுக்கு வீணில் அனுப்பாது இந்தியாவிற்கு மிருதியாக்கும் படிக்கும், எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கருள் புரிவாரென நாம் வேண்டுகிறோம்.

சுபம்.

இந்து வைத்தியாபிமானி.

## மறுபிறப்பு.

### மறுஜன்மம் உண்டா?

---

இம்மறுபிறப்பென்பது பெரிய பிணி. இதை விசாரிப்பதால் நமக்கேற்படும் பயன் இது. இம்மறுபிறப்புக்குக் காரணம் இன்னதென்றும் பிறந்தவுடன் நாம் அனுபவிக்கும் சுக துக்

கங்களுக்குக் காரணம் இதற்கு முன் ஜன்மத்திற் செய்த கர்மமென்றும் ஆகவே அக்கன்மம் சரியாய் இருந்தால் சுகம் பெறுவோம் இல்லாவிடில் துக்கமடைவோம் என்றும் ஆகவே இச்சன்மத்தில் யாம் நற்கார்யத்தைச் செய்திடின் அது வரும் ஜன்மாவிற்குபயோக முள்ளதாய் இருக்குமென்றும் நாம் இறந்து மறுஜன்மம் அடையும் வரை நாம் இருக்கும் இடமும் இன்னரூபமென்றும் அங்கு அனுபவிக்கும் சுகதுக்கமும் பிறகு மறுபிறப்பிற்கு முதற்காரணமும் நன்கு தெரிந்தால் தான் நமக்கு பயபக்தி உண்டாகுமென்றும் ஆதல் பற்றி இனி நிச்சயமாய் இறக்கும் நாம் மறுஜன்மமடையலாம் என்று நம்ப வேண்டும் என்றும் இதை விசாரிக்க அவசியம் நேர்ந்தது. மறுபிறப்பு உண்டென்பதை கீதாசார்யர்

जातस्य हि ध्रुवो मृत्यु ध्रुवं जन्म मृतस्य च ।

பிறந்தவனுக்கு அவசியம் இறப்புண்டு இறந்தவனுக்கு நிச்சயமாய்ப்பிறப்புமுண்டென்ருர். ஆனல் இறந்தவன் நிச்சயமாய்ப் பிறப்பானென்று எவ்விதம் சொல்லலாம். இறந்தவன் நிச்சயமாய்ப்பிறப்பானென்ருல் நாம் மறுபிறப்பில்லாமலொழியமாட்டோமே. அப்போது இப்பிணி நமக்கு எப்பொழுது தீருமென்ருல் 'அதப்படியல்ல மோக்ஷமடைந்தவன் திரும்பமாட்டான். இங்கு சொன்னது நாம் இறப்போம், பரலோகம் போவோம் என்று கமனகமனம் உள்ள ஸம்ஸாரிக்குச் சொல்லியவார்த்தை. ஆதல்பற்றியே ஆரம்பத்தில்

नत्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
नचैव न भविष्यामः सर्वे वयमतःपरम् ॥

நானும் நீயும் இந்த யுத்தகளத்திற் கூடியுள்ள அரசர்களும் இதற்கு முன்னும் இருந்தோம். இப்போதுமிருக்கிரும் இனியும் நாமெல்லோருமிருப்போம் என்று சொன்னதில் ஜீவனென்ற வியவஹாரத்தை வைத்துப் பேசினல் இச்சீவன் எத்தனையோ ஜன்மத்தை அடைந்தது. இறந்தது. இப்போது

இந்த ஜன்மத்தை அடைந்திருக்கிறது. இனியும் இதைவிட்டுப் புறப்பட்டு மறுஜன்மாவை அடையப் போகிறது. ஆகையால் நித்தியயாத்திரை செய்பவன் நடுவழியில் சிரமபரிகாரத்திற்காக சத்திரம் சாவடியில் இஷ்டப்படி தங்கிவிட்டு யதேச்சையாய் எழுந்திருந்து போவதுபோல் இச்சீவனும் ஸ்வதந்திரமாய்ப்போய்விடுவான். மறுஜன்ம மெடுப்பான். ஆதல்பற்றி காலத்திரயத்திலுமிருப்பான். ஆன்மா என்ற வியவகாரத்தாற் பார்த்தால் அவனுக்கு எப்போது மழிவில்லை. என்று இதனுல் மறுபிறப்புண்டு என்பதைத்தான் கீதாசாஸ்திரத்தில் முதலிலேயே ஆரம்பித்தார். சுருதியிலும் பாபம் செய்தவர்கள் கையில்லாதவர்களாயும் காலில்லாதவர்களாயும் தலை மயிரில்லாதவர்களாயும் பிறந்து பிறந்து அடிக்கடி மிருத்யுவை அடைகிறுர்கள். அங்கு யாதனையில் தன் கன்மங்களால் அனுபவிக்கப்படுகிறுன். புழுப்போல் ஜனித்து மடிகிறுன் என்றிருக்கிறது. சாந்தோக்யத்தில் அப்பாபிகள் இவ்வுலகில் புலியாகவோ சிங்கமாகவோ சென்னுய் ஆகவோ பன்றியாகவோ புழுவாகவோ விளக்குப் பூச்சியாகவோ ஈயாகவோ கொசுவாகவோ பிறக்கிறுர்கள் என்கிறது. இன்னும் தர்மசாஸ்திரங்களிலும் புராணங்களிலுமிறங்கினுல் கணக்கில் அடங்காத பிரமாணங்களும் கதைகளும் கிடைக்கும். சுருதியிலும் ஏராளமாய் வளர்த்துக்கூறுகிறது. அதிகமாய்க் கூறுவானேன். பாபம் செய்தவர்கள்தான் மறுபிறப்பை அடைவார்களென்பதில்லை. மற்று புண்ணியம் செய்தவர்களுக்கும் அக்கெதியுண்டென்பதும் நமது கொள்கை. இங்கு ஏராளமாய்ப் புண்யம் செய்தால் அவர்கள் ஸ்வர்க்கவாஸம் செய்து அனுபவித்து பிறகு புண்யம் குறைந்ததும் இம்மானிடவுலகிற் புகுவார்கள். ஆனுல் புண்யசாலிகளும் பாபியைப்போற் பிறப்பதென்றுற் பயன் யாது என்றுல் அஃதல்ல. இவ்விஷயத்தை அர்ஜுனன் கிருஷ்ணனைப் பார்த்து ஸ்வாமி யோகம் முதலிய நற்கன்மாவை செய்து கொண்டிருப்பவன் யோகசித்தி அடைவதற்கு முன் இறந்துவிட்டாலவன் கதி யாது. ஸித்தி பெற்றவனது

லோகமும் கிடையாது. மற்றுகன்மிகளது கதியுமில்லை. இரு கையும் விட்டேன் பெண்டிரே என்பதையொப்ப அவனுக்கு திரிசங்கு ஸ்வர்க்கம் தானே என்று வினவ அதற்கு பகவான்

न हि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति ।
प्राप्य पुण्यकृतां लोका नुषित्वा शाश्वतीस्समाः ॥
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ।

அப்பா மங்களகார்யத்தைச் செய்பவன் ஒருவனும் கெட்ட கதியை அடையமாட்டான். அவன் இறந்ததும் புண்யவான்களது லோகத்தில் வெகு வருடகாலங்கள் வஸித்துப் பிறகு திரும்பி பரிசுத்தமான ஸ்ரீமான்களது கிருகத்திற் ஜனிப்பான் என்றார். இதனால் பாபிகள் பிறப்பும் இறப்பும் த்வனியாலுரைக்கப் பெற்றது. எவ்விதமெனின் அப்பா கெட்டகன்மம் செய்கிற ஒவ்வொருவனும் பாபிகளது லோகமான நரகத்தை அடைந்து அங்கு வெகு வருடகாலம் தங்கிப் பிறகு அசுத்தமுள்ளவர்களும் ஏழைகளுமானவர்களது வீட்டிற் ஜனிப்பான் என்று இங்கொன்று கவனிக்கத்தக்கது. அர்ஜுனன் பகவானது உபதேசங்களைப் பெற்றுக் கொண்டு ஆங்காங்கு தோன்றும் சங்கைகளையும் கேட்டுத்தெளிந்து கொள்கிறான். அவ்விதம் ஸம்சயங்களைத் தீர்த்துக் கொண்டு யோகத்தின் விஷயத்தைப்பற்றிச் சொல்லி வரும்போது யோகமகிமையில் ஈடுபட்ட அவனுக்கு இந்த ஆசங்கை நிகழ்ந்தது. ஆகா இவ்விதமகிமையுள்ள யோகத்திலிறங்கியவன் அதன் ஸித்தியைப் பெறுமுன் இறந்துவிட்டால் அவன் கதி அதோகதியாய்விடுமோ என்று நடுங்கி மனம் புழுங்கிக் கேட்டான். இதைக் கண்ட பகவான் முதலில் **नहि** என்றும் அவனைக் கூப்பிடும்போது **तात** என்றும் **कश्चित्** என்றும் **शाश्वतीः** என்றும் இன்னும் ஒவ்வொருபதங்களையும் மிக அபிப்பிராயம் அமைந்ததாகவே போட்டிருக்கிறார். இவைகளால் மறுஜன்மம் உண்டென்றும் அது

தான் கவனிக்கத் தக்கதென்று மேற்பட்டது. இப்பதங்களின் அழகை விரிப்பதென்றால் இங்கு பெருகுமாதல் பற்றி அவைகளைப் பற்றி எம் போன்றவர் பெரியோரிடம் பணிசெய்து கேட்டுக்கொள்வார்களென்று இங்கு விடுத்து மேற்செல்வோம். ஆகவே புண்யம் செய்தவர்கள் இங்கிருந்து ஸ்வர்க்கலோகத்தை அடைவார்கள். அங்கு தேவர்களது சேர்க்கையால் நித்ய ஸந்தோஷத்தை அனுபவித்துப் பிறகு அது முடிந்ததும் பூலோகத்தில் வந்ததும் முன் அப்பியாஸத்தின் பலத்தால் ஸத்கர்மாவில் அதிக சிரத்தையைப் பெற்றுப் பிறகு ஸத்தியலோகம் சென்று பிர்மஸபையில் அங்கு ஸநகாதி நித்யமுக்தர்களுடன் வேதாந்த விசாரம் செய்து பிறகு பிர்ம ஸாயுஜ்யத்தைப் பெற்றுக் கடைசியில் ஒரு நாளும் திரும்பி வாத்தகாத முக்தியை அடைந்து விடுகிறார்கள். ஆகையால் பாபிகள் போல் புண்யசாலியும் மறுஜன்மமெடுப்பதிலச்சமில்லை. இவ்வளவால் யாம் தெரிந்துகொண்டதென்னவென்றால் நமது மதக் கொள்கையின்படி நமக்கு மறுஜன்ம முண்டென்றும் அதனால் பாபம் செய்து கெட்ட ஜன்மத்தைப் பெறாமல் புண்யம் செய்து நற்கதி பெற்றுப் படிப்படியாய்க் கிரம முக்தியையும் பிறகு பரமகைவல்யத்தையுமடைய முயற்சிக்க வேண்டுமென்றுமாயிற்று. இனி இறந்தவுடன் ஜீவன் எப்படிச் செல்கிறான். எங்கு தாமதிக்கிறான் எனபவற்றைப் பற்றி விசாரிப்பாம்.

எம்.என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

## வேதவேதாங்க ஸ்வரூபம்.

அனேக ஜன்மாக்களில் செய்யப்பட்ட புண்யகர்மாக்களின் பரிபாகத்தால் ஏற்பட்ட பிராம்மண்யத்தை வாய்ந்த யாவரும் நியமமாக வேதங்களை அப்யஸிக்கவேண்டும். அப்ய

ஸித்து அவைகளின் பொருளை நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டும். ஆராய்ச்சி செய்து அவைகளில் விதித்தபடி ஸத்கர்மாக்களை அநுஷ்டிக்கவேண்டும். அப்படிச்செய்யப்பட்ட கர்மாக்களின் பயனைவிரும்பாது ஆத்மஞானத்தைப்பெற முயலவேண்டும். அப்போதுதான் பிராம்மண்ய மடைந்ததற்குப்பிரயோஜனம் நிலைத்ததாகும்.

வேதமானது பிதிருக்கள், தேவர்கள், மனுஷ்யர்கள் இவர்களுக்கு ஹவ்யம், கவ்யம், அன்னம் இவைகளையளிப்பதிற்கு உரிய முறைகளை நன்குவிளக்கி அழிவில்லாத கண்போல் உதவுகிறது. நம்முடைய கண் பககத்திலுள்ள வஸ்துக்களைத் தான் தெரிவிக்கும். வேதமோ அக்கண்ணுக்குப் புலப்படாத பரோக்ஷமான வஸ்துக்களையும் அறிவிக்கும். அது ஒரு புருஷனாலும் செய்யப்படாததால் அபௌருஷேய மென்று கூறப்படுகின்றது. அதனால் புருஷனுக்குரிய ராகத்வேஷங்கள் அதில் ஏற்படக்காரணமில்லை. அவ்வேதத்தின் பொருளையும் மீமாம்ஸை முதலான கிரந்தங்களின் மூலமாகவே நிச்சயிக்கவேண்டுமேயல்லாது தன்புத்தி போக்குப்படி நிச்சயிக்கக்கூடாது. சைத்யவந்தனத்தால் ( चैत्यवंदनात् ) விண்ணுலகம் கிடைக்கும் என்று போதிக்கும் வேதத்திற்குப் புறம்பான ஸ்மிருதிகளும் அபூர்வத்தை நிராகரிக்கின்ற வேதத்திற்கு எதிரிடையான சார்வாக தர்சனங்களும் பரலோக சாதனமான வழியையறிவிக்காமல் நாகத்தையேவிளைவிக்கும். வேதத்தைக்காட்டிலும் புறம்பான நூல்களை யாதாரமாகக்கொண்ட சாஸ்திரங்கள், பௌருஷேயங்களானதால் அவைகள் பிரயோஜனத்தை யளிக்கச்சக்திவாய்ந்தவைகளுமாகமாட்டா. எந்த ஸ்மிருதிகள் வேதத்தை யாதாரமாய்க்கொண்டனவோ, அவையே ஏற்றுக்கொள்ளக்கூடியவை. சாதுர்வர்ண்யமோ, ஸ்வர்க்காதி லோகமோ, நான்கு ஆசிரமங்களோ, நடந்தவைகளோ, நடக்கின்றனவையோ, நடக்கப்போகின்றனவோ யாவும் வேதத்தாலேயே அறிவிக்கப்படுகின்றன. வேதத்தில் விதித்தபடி வேதியர்களால், அக்னியில் ஹோமஞ் செய்யப்பட்ட ஹவிஸ்ஸானது சூரியனை அடைகிறது. சூரிய

னிடமிருந்து மழையாக ஏற்பட்டு அதனுல் அன்னமும் அத னுல் பிரஜைளின் விருத்தியும் ஏற்படுகிறது. எவனெருவன் வேதசாஸ்திரங்களைக்கசடறக்கற்று உணருகின்ருனே அவனே ஸேனுதிபதியாயிருத்தல் முதலான ராஜ்ய கார்யங்களை நடத்து வதற்குத் தக்கவனென்று மனுஸ்மிருதி போதிக்கிறது. எவ்வி தம் நன்ருய்ப் பிடித்துக்கொண்ட நெருப்பானது ஈரமான விற குகளையும் எரித்துவிடுமோ அவ்விதமே வேதமறிந்த வேதியன் பாபங்களை தஹித்துவிடுவான். மேலும் எவனெருவன் வேதத் தின் பொருளை நன்கு ஆராய்ச்சி செய்து நித்யநைமித்திகாதி கர்மாக்களைச் செய்து, அதனுல் மனதை நிர்மலமாக்கி பிரும்ம சர்யம் முதலான ஆசிரமங்களைப் பற்றி நிற்கிருனே அவன் இவ் வுலகிலேயே பிரும்மபாவத்தை அடைகிருன்.

கொஞ்சமாக அத்யயனம் செய்பவரைக்காட்டிலும் பூர்ண மாக அத்யயனம் செய்பவர் சிறந்தவராவார். அத்தியயனஞ் செய்ததைமறவாமல் மனதில் தாரணஞ்செய்பவர் அவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள். பொருளை நன்குணர்ந்தவர் அவ ர்களைக்காட்டிலும் மேம்பட்டவர்கள் உணர்ந்தபடி அனுஷ் டிப்பவர் எல்லாரைக்காட்டிலும் சிறந்தவர்களாவர்கள்.

ஸ்வதர்மப்படி நடந்துகொள்வதாகிற தவமும், ஆத்ம ஞானமும், பிராம்மணனுக்கு மோக்ஷஸாதனங்கள். பிராம் மணன் தவத்தால் பாபத்தைப் போக்கி பிரும்மஞ்ஞானத்தால் மோக்ஷத்தைப்பெறுகிருன். இக்கருத்தை அடியிற்கண்ட ஸ்மி ருதி அறிவிக்கிறது.

तपो विद्याच विप्रस्य निःश्रेयसकरं परम् ।
तपसा किल्बिषं हन्ति विद्ययाऽमृतमश्नुते ॥

எவனெருவன் தர்மத்தின் நுட்பத்தை யறிந்து கொள்ள விரும் புகிருனே, அவன் வேதமூலமான தர்மசாஸ்திரம், ஆகமம், மீமாம்ஸை, இவைகளின் நியாயத்தால் ஏகவாக்யப்படுத்த வேண்டும். அவனே உண்மையாய் தர்மமறிந்தவனுவான்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரிகள்.